ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்டரிங்

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

SREE Annapoorna SREE Gowrishankar
The pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 38 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, டிச 17 - 23, 2023, 10 பக்கங்கள், ₹5/- ஆண்டு சந்தா - ₹260/-

*விருது பெற்ற பாரத் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் அப்ளையன்ஸின் நிர்வாக இயக்குநர் ராஜா ரவிச்சந்திரன், சால்சர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்டின் இணை நிர்வாக இயக்குநர் ராஜேஷ்குமார் மற்றும் சங்கர் அண்ட் அசோசியேட்ஸின் சீனியர் பார்ட்னர் ரமணி சங்கர் ஆகியோருடன் சன்மார் குழுமத்தின் துணைத் தலைவர் என்.குமார், தலைவர் ஸ்ரீராமுலு, துணை தலைவர்கள் உள்ளிட்டோர்.*

## இந்திய தொழில் வர்த்தக சபை கோவை சார்பில்

# ஜி.கே சுந்தரம் விருது

✍ **சுகன்யா,** தி கோவை மெயில்

இந்திய தொழில் வர்த்தக சபை கோவை சார்பில் ஜி.கே சுந்தரம் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி சேம்பர் டவரில் நடைபெற்றது.

கோயம்புத்தூரின் முன்னணி தொழிலதிபரும் பன்முக ஆளுமை தன்மை கொண்டவருமான ஜி.கே சுந்தரம் அவர்களின் நினைவாக இந்திய தொழில் வர்த்தக சபை கோவை சார்பாக வர்த்தகம், தொழில் மற்றும் சேவைஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் சிறப்பாகச் செயல்பட்டு வரும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து ஜி.கே சுந்தரம் விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டு வர்த்தக சேவை பிரிவில்: பாரத் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் அப்ளையன்ஸ், தொழில் பிரிவில்: சால்சர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் மற்றும் சேவைபிரிவில் சங்கர் அண்ட் அசோசியேஷன் ஆகிய நிறுவனங்கள் பெற்றன.

**ராஜா ரவிச்சந்திரன்,** நிர்வாக இயக்குநர், பாரத் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் அப்ளையன்ஸ் பேசுகையில், 'கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறிய நிறுவனமாக பாரத் எலக்ட்ரானிக்சை தொடங்கினேன். எங்களின் விடா முயற்சியும், கடின உழைப்பும், அர்ப்பணிப்பும் இன்று கோயம்புத்தூரின் முன்னணி நிறுவனமாக உயரச் செய்திருக்கிறது. மேலும், 38 கிளைகளாக விரிவடைந்து இருக்கிறது. எங்கள் பணிகள் சிறக்க இந்திய தொழில் வர்த்தக சபை வழங்கிய விருது மேலும் ஊக்குவிக்கும் என்று பெருமையுடன் கூறுகிறேன்' என்றார்.

**ராஜேஷ்குமார்,** நிர்வாக இயக்குநர், சால்சர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் பேசுகையில், '38 ஆண்டுகளுக்கு முன்பு சிறு தொழில் நிறுவனமாகத் தொடங்கப்பட்ட சால்சர் எலக்ட்ரானிக்ஸ்

இன்று 5 தொழிற்சாலைகளுடன் இந்தியாவின் மிகச் சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக உள்ளது. இந்நிறுவனம் இந்நாள் வரையிலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு என் தந்தையின் உயரிய சிந்தனையுடன் கூடிய தொழில்நுட்ப நுணுக்கங்கள் முக்கிய காரணிகளாக உள்ளது என்றால் அது மிகையல்ல' என்றார்.

**ரமணி சங்கர்,** சீனியர் பார்ட்னர், சங்கர் அண்ட் அசோசியேஷன் பேசுகையில், 'இந்த விருது வழங்கும் நிகழ்வு என் மனதிற்கு மிகவும் நெருக்கமானதாக அமைந்திருக்கிறது. காரணம், 1970களில் ஜி.கே சுந்தரம் விழா நடைபெறுகின்ற இந்த கட்டிடத்தை வடிவமைக்கும் பொறுப்பை என்னிடம் கொடுத்திருந்தார். இங்கு விருது பெற்றவர்கள் எனது வாடிக்கையாளர்கள் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். எனது பணியில் எதற்காகவும் சமரசம் செய்து கொள்வதில்லை. இதுவே, எனது வெற்றியின் அடிக்கல்லாகக் கருதுகிறேன்' என்றார்.

விருது வழங்கும் நிகழ்வைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சன்மார் குழுமத்தின் துணைத் தலைவர் **குமார்** பேசுகையில், 'இந்தியாவில் வளரும் தொழில் நகரங்களின் பட்டியலில் கோவை முக்கிய இடத்தில் உள்ளது. அதிலும், இந்திய தொழில் வர்த்தக சபை தனது இன்றியமையாத பங்களிப்பை அளித்து வருகிறது. ஆட்டோமொபைல் நிறுவனங்கள், வர்த்தக தொழில் நிறுவனங்கள் போன்றவற்றை ஊக்குவித்து தொழில் துறையில் முன்னோடி நகரமாகக் கோவையைக் கொண்டு செல்வதில் முனைப்புடன் இந்திய தொழில் வர்த்தக சபை செயல்படுவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது' என்றார்.

இந்நிகழ்ச்சியில், இந்திய தொழில் வர்த்தக சபை கோவையின் தலைவர் ஸ்ரீராமுலு முன்னிலை வகித்தார். ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இயக்குநர் வைஷ்ணவி சிறப்பு விருந்தினரை வரவேற்று பேசினார். மேலும், இந்திய தொழில் வர்த்தக சபையின் துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

**ஜி. கே சுந்தரம் யார்?**

நூற்றாண்டு பெருமைமிக்க லட்சுமி மில்ஸ் குடுபத்தின் புகழ்மிக்க இளவல். தனது பதினாறாம் வயதிலேயே மகாத்மா காந்தியின் கொள்கைகளின் மேல் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்.

தமிழகத்தில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர். ஜவுளி தொழில் சார்ந்து பல சாதனைகளை செய்தவர். இந்திய தொழில் வர்த்தக சபை போன்ற தொழில் அமைப்புகள், கோவை கம்பன் கழகம் போன்ற இலக்கிய அமைப்புகள், விளையாட்டு அமைப்புகள் என்று அனைத்திலும் தனது தனி முத்திரையை பதித்தவர்.

Congratulations...
THE COVAI MAIL
on crossing yet another Milestone.
May your 11th year bring success and happiness.

Learn Beyond
KPR Institutions
Avinashi Road, Arasur, Coimbatore - 641407



# மருத்துவத்தை தேடி சென்றது அந்த காலம்

# நம் வீடு தேடி மருத்துவம் வருவது இந்த காலம்

## இந்திய அளவில் ஹோம் ஹெல்த்கேரில் சிறந்த மருத்துவமனையாக ஜி.கே.என்.எம் தேர்வு

இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்படும் மக்கள் விகிதம் அதிகரித்து வருகிறது. மேலும், இதய நோய்கள், சுவாசக் கோளாறுகள், பக்கவாதம், சிறுநீரக செயலிழப்பு, புற்றுநோய் போன்ற நாள்பட்ட நோய் பாதிப்புகளால் அவதிப்படும் பெரும்பாலானோர் மருத்துவமனைக்கு வந்து செல்ல முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அவர்களின் இன்னல் நிலையை உணர்ந்து, தோளோடு தோள் சேர்த்து ஆதரவு கொடுக்கும் வகையில் 'ஹோம் ஹெல்த் சர்வீஸ்' என்ற திட்டத்தின் வழியே நோயாளிகளின் இருப்பிடத்திற்கே சென்று மருத்துவக் கண்காணிப்பு, செவிலியர்கள், ஃபிளெபோடோமி சேவைகள் என அனைத்தும் உள்ளடக்கிய மருத்துவ பராமரிப்பு உதவிகளை ஜி. குப்புசாமி நாயுடு மருத்துவமனை செம்மையாகவும் சிறப்பாகவும் செய்து வருகிறது.

ஜி.கே.என்.எம். மருத்துவமனையின் தலைமை நிர்வாக அதிகாரியான டாக்டர் ரகுபதி வேலுசுவாமியின் வழிகாட்டுதலின் பேரில் டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப பல புதுமைகளை உட்புகுத்தி ஜி.கே.என்.எம். சிறப்பாக செயலாற்றி வருவதை பாராட்டிய இந்திய தொழில் கூட்டமைப்பு (சி.ஐ.ஐ) சார்பில் 2023ம் ஆண்டிற்கான சிறந்த "ஹோம் ஹெல்த்கேர் இனிஷியேட்டிவ் 2023" விருதினை வழங்கியுள்ளது.

மருத்துவமனைகள், மருத்துவ நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள், மருத்துவ சேவை வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின் சிறப்பான மருத்துவ சேவைகளை அங்கீகரிக்கும் விதமாகவும் பாராட்டும் விதமாகவும் 'சி.ஐ.ஐ. இன்னவேஷன் இன் ஹெல்த்கேர் அன்டு ஹாஸ்பிட்டல் டெக்னாலஜி விருது 2023' வழங்கப்படுகிறது. மும்பையில் நடந்த சி.ஐ.ஐ. ஹாஸ்பிட்டல் டெக் 2023 மருத்துவ உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற இந்த விருது வழங்கும் நிகழ்ச்சியில் ஜி.கே.என்.எம். மருத்துவமனைக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

ஹோம் ஹெல்த்கேர் இனிஷியேட்டிவ் 2023' விருதினை மருத்துவர்கள் குழுவிடம் வழங்குகிறார் ஜி.கே.என்.எம். மருத்துவமனையின் முதன்மை செயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசாமி.

கல்வி, வங்கி, மருத்துவம், விளையாட்டு உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் டிஜிட்டல் பரிணாமங்கள் பெற்றுள்ளன. அதிலும், இந்த டிஜிட்டல் மாற்றம் இந்தியாவின் சுகாதார (ஹெல்த்கேர்) துறையில் நல்ல வளர்ச்சி கண்டுள்ளது. இதன் வளர்ச்சி 2022 இல் 27 கோடியாக இருந்தது, 2030க்குள் 37 கோடியாக, அதாவது பத்து மடங்கு அதிகரிக்கும் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறாக, அசுர வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் புதுமையான அணுகுமுறைகள் மற்றும் செயல்முறைகளை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக இந்திய மருத்துவத் துறையில் புதியதோர் சகாப்தத்தை உருவாக்கி வரும் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ சேவை வழங்கும் நிறுவனங்களை கௌரவித்து ஊக்கமளிக்கும் நோக்கில் இந்தியத் தொழில் கூட்டமைப்பு, இத்தகைய சிறப்பு விருதுகளை அளித்து வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூரில் முதல் தனியார் மருத்துவமனையாக தொடங்கப்பட்டு இன்று வரை மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவையை வழங்கி வரும் ஜி.குப்புசாமி நாயுடு மருத்துவமனைக்கு இந்தியாவின் சிறந்த ஹோம் ஹெல்த்கேர் இனிஷியேட்டிவ் 2023 விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

ஜி.கே.என்.எம். மருத்துவமனை கடந்த 2017 ம் ஆண்டில் நோயாளிகளின் இருப்பிடத்திற்கே சென்று மருத்துவ சேவை அளிக்கும் முயற்சியைத் துவங்கியது. புற்றுநோய், இருதய செயலிழப்பு, கடுமையான நுரையீரல் பிரச்னைகள், இறுதி நிலை சிறுநீரகப் பிரச்னைகள் மற்றும் டெமென்ஷியா போன்ற நரம்பியல் பிரச்னைகள் உள்ளிட்ட நோய்களால் தீவிரமாக பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வர இயலாத நிலையில் உள்ள நோயாளிகளின் வீட்டிற்கே சென்று நோய்தடுப்பு சிகிச்சை அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மேலும் நோயாளிகளை பராமரிப்பவர்களுக்கு, இத்தகைய நோயாளிகளை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்கிற உளவியல் ரீதியிலான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ உதவியாளர்கள், ஃபிசியோதெரப்பிஸ்டுகள் மற்றும் மருத்துவ ஆலோசகர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து, நோயாளிகளின் இருப்பிடத்திற்கே சென்று இத்திட்டத்தின் வாயிலாக சிறப்பான மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. 24 மணி நேரமும் எவ்வித தடையுமின்றி தேவைப்படும் அனைவருக்கும் மருத்துவ சிகிச்சைகள் கிடைக்கப்பெற வேண்டும் என்பதற்காக ஜி.கே.என்.எம். மருத்துவமனை 24 மணி உதவி அழைப்பு மையத்தை நிறுவியுள்ளது. கோவை மாவட்டத்தில் எங்கு, எப்போது மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டாலும் உடனடியாக சென்று சிகிச்சை அளிக்கும் வகையில் பல்துறை மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழு உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களின் நலனில் அக்கறையுடன் அன்று தொடங்கிய சேவை இந்நாள் வரையிலும் அனைவரின் பேராதரவுடன் சிறப்பாக இயங்கி வருகிறது. இத்தகைய மகத்தான சேவைக்காக இந்தியாவின் சிறந்த ஹோம் ஹெல்த்கேர் இனிஷியேட்டிவ் மருத்துவமனையாக ஜி.கே.என்.எம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

> **நோயால் தீவிரமாக பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வர இயலாத நிலையில் உள்ள நோயாளிகளின் வீட்டிற்கே சென்று நோய்த் தடுப்பு சிகிச்சை அளிப்பதே முக்கிய நோக்கம்.**
>
> **டாக்டர் ரகுபதி வேலுசுவாமி**
> தலைமை நிர்வாக அதிகாரி, ஜி.கே.என்.எம்

### 'தி வீக்' - ஹசனா சர்வேயில் சிறந்த மருத்துவமனை

**இந்தியாவில் மிகவும் பிரபலமான இதழான 'தி வீக்' - ஹசனா சர்வேயில் தென் இந்தியாவில், கோயம்புத்தூர் மாவட்டத்தின் சிறந்த பன்னோக்கு மருத்துவமனையாக தரவரிசையில் முதல் மூன்று இடங்களுக்குள் இடம்பிடித்து சிறந்த மருத்துவமனையாக ஜி.கே.என்.எம் செயல்பட்டு வருகிறது.**

# உலக தமிழ் பண்பாட்டு மைய ஆண்டு விழா

# தமிழிற்கு ஈடு இணை எதுவும் இல்லை!

## - நல்ல ஜி. பழனிசாமி, தலைவர், உலகத் தமிழ் பண்பாட்டு மையம்

✍ வெ.சீ.அனிஷா, தி கோவை மெயில்

உலக தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் 10 ஆம் ஆண்டு விழா டாக்டர் என்.ஜி.பி. கலை, அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூல் வெளியீடு மற்றும் விருது வழங்கும் நிகழ்ச்சி அரங்கேறியது.

நிகழ்வில் உலகத் தமிழ் பண்பாட்டு மையத் தலைவர் நல்ல ஜி.பழனிசாமி பேசியதாவது:

உலகத் தமிழ் பண்பாடு மையம் கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து செயலாற்றி வருகிறது. தமிழ் என்பது மிகப் பழமையான மொழி, அதற்கு ஈடுயிணை எதுவும் இல்லை. பழமையான மொழிகளான லத்தின், கிரேக்கம் மொழிகளெல்லாம் மறைந்து விட்டன. ஆனால், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வளர்ந்த நமது தமிழ் மொழி, இன்றும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அவ்வகையில், தமிழை மறக்கக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு சிற்பி பாலசுப்பிரமணியம், முனைவர் பொன்னுசாமி ஆகியோருடன் இணைந்து உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தைத் தொடங்கினோம். எனவே, மாணவர்கள் எந்த மொழியை படித்தாலும் தாய்மொழியான தமிழை மறந்துவிடாதீர்கள் என்பதே இதன் முக்கிய நோக்கம் ஆகும். தமிழிற்காக ஏராளமானோர் தொண்டு செய்துள்ளனர். அவர்களில் குறிப்பிட்டோரை ஆண்டுதோறும் தேர்வு செய்து விருது வழங்கி ஊக்குவித்து வருகிறோம் என்றார்.

உலக தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் 10 ஆம் ஆண்டு விழாவில் விருது பெற்றவர்களுடன் மையத்தின் தலைவர் நல்ல ஜி பழனிசாமி, அறங்காவலர்கள் தவமணி தேவி பழனிசாமி, பத்மஸ்ரீ சிற்பி பாலசுப்பிரமணியம் உள்ளிட்டோர்.

இதில் மருதநாயகம் சிற்பியின் பாரதி கைதி எண் 253 என்ற ஆங்கில மொழியாக்கக் கவிதை நூலை உலக தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் தலைவர் நல்ல பழனிசாமி வெளியிட, முனைவர் ப. மருதநாயகம் பெற்றுக்கொண்டர். தொடர்ந்து, உலக தமிழ்ப் பண்பாட்டு மையம் 2023 ஆம் ஆண்டுக்கான உ.வே. சா. தமிழறிஞர் விருதினை பா.ரா. சுப்பிரமணியன் பெற்றார். அதோடு ரூ. 3 லட்சத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டது. இதையடுத்து, பெரியசாமித் தூரன் தமிழ்ப் படைப்பாளர் விருதை எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அவர்களுக்கும், டாக்டர் நல்ல பழனிசாமி பிற துறைத் தமிழத் தொண்டர் விருதினை முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கு பாராட்டுப் சான்றிதழ்களும் ரூ.2 லட்சத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டன.

மேலும், முனைவர் சு.சண்முகசுந்தரம், முனைவர் ஆ.மணி, எழுத்தாளர் க.அம்சப்ரியா ஆகியோருக்கு சிறப்பு விருதுகளாக பாராட்டு சான்றிதழ்களும், ரூ.50,000 க்கான காசோலை வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

விருது பெற்ற முனைவர் பா.ரா.சுப்பிரமணியன், எழுத்தாளர் நாஞ்சில் நாடன், முனைவர் ஆ.இரா.வேங்கடாசலபதி ஆகியோர் ஏற்புரை ஆற்றினர்.

முன்னதாக கல்லூரியின் செயலரும், உலக தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் அறங்காவலருமான தவமணி தேவி பழனிசாமி வரவேற்புரை வழங்கினார்.

எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் விருது பெற்றோருக்கு வாழ்த்துரை வழங்கினார். டாக்டர் என் ஜி பி கலை அறிவியல் கல்லூரி இயக்குநர் முத்துசாமி நன்றியுரை வழங்கினார்.

> மாணவர்கள் எந்த மொழியை படித்தாலும் தாய்மொழியான தமிழை மறந்து விடாதீர்கள்.

## "தமிழின் வளம் தமிழர் நலம்" பத்மஸ்ரீ சிற்பி பாலசுப்பிரமணியம்

2013 இல் தொடங்கப்பட்ட இந்த உலக தமிழ் பண்பாடு மையம் "தமிழின் வளம் தமிழர் நலம்" எனும் நோக்கத்தோடு செயலாற்றி வருகிறது.

அத்தகைய உயரிய பணியை கடந்த 10 ஆண்டுகளில் 9 ஆண்டுகள் சிறப்பாக செய்து பணியாற்றி வருகிறது. இந்த மையம் சிறப்பான கருத்தரங்குகளை நடத்துவது, விருது வழங்குதல் மற்றும் சிறந்த நூல்களை வெளியிடுதல் என மூன்று வகையாக தனது பணிகளை செய்கிறது. இந்த உலக தமிழ் பண்பாடு மையத்தை சிறப்பாக நடத்தி வருகின்ற தலைவர் நல்ல பழனிசாமி, அறங்காவலர்கள் டாக்டர் தவமணிதேவி பழனிசாமி, முனைவர் ப. மருதநாயகம், முனைவர் தெ. ஞானசுந்தரம், இயகாகோ என்.சுப்பிரமணியம் ஆகியோர் இம்மையத்திற்கு உறுதுணையாக செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மேம்பாட்டிற்கான செயல்

முனைவர் ப.மருதநாயகம்

உலக தமிழ் பண்பாடு மையமானது, தமிழ் இனம், தமிழ் இலக்கியம், தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம் ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக அரிய செயல்களை செய்து வருகிறது. பாரதியின் கனவுகளை நிறைவேற்ற இந்த மையம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் பல.

அவ்வகையில் மருத்துவர் நல்ல பழனிசாமி, சிற்பி பாலசுப்பிரமணியம் நடத்தி வரும் தன்னலமற்ற இந்த வேள்விக்கு துணை செய்வதற்காக என்னையும் தேர்வு செய்திருக்கிறார்கள். அதற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

கோவை
பி.எஸ்.ஜி. மருத்துவமனையில்...
PSG
PSG & SONS' CHARITIES
97 Years in Nation Building
உலகத்தரம் வாய்ந்த, அதிநவீன
ரொபோட்டிக் அறுவை சிகிச்சை
- புற்றுநோய் அறுவை சிகிச்சை
- இருதய அறுவை சிகிச்சை
- சிறுநீரக அறுவை சிகிச்சை
- மகளிருக்கான அறுவை சிகிச்சை
- குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சை
- குடல் மற்றும் ஹெர்னியா அறுவை சிகிச்சை
நடுநிலையான கட்டணம் | மிக துல்லியமானது மற்றும் நுணுக்கமானது
மிகச்சிறிய தழும்பு | முற்றிலும் பாதுகாப்பானது | மிக குறைவான இரத்தப்போக்கு
மிக விரைவில் நலம் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு: 98947 59934, 82200 13330
PSG HOSPITALS
பி.எஸ்.ஜி. மருத்துவமனை
பீளமேடு, கோவை - 641 004
www.psghospitals.com
PATIENT SAFETY & QUALITY OF CARE NABH ACCREDITED


Wishing
THE COVAI MAIL to reach new heights
by
COINDIA®
COINDIA Modern Tool Room
COINDIA Training Centre
COINDIA Business Centre
COINDIA Raw Material Bank
COINDIA Energy Management Cell
...First of its kind in Tamilnadu.....
Common facilities to Pump, Motor, Foundry and Engineering MSMEs
www.coindia.in | info@coindia.in

With Best Compliments
from
siema®
Engineering Prosperity
The Southern India Engineering Manufacturers' Association
SIEMA Building, 8/4, Race Course, Coimbatore - 641 018.
siema@siema.org
www.siema.org


We congratulate the management and staff
of THE COVAI MAIL newspaper on the 10th anniversary!
Celebrating
50
1971-2021
Years of
Happiness
Haribhavanam cooks nostalgia into your food enjoying the best of fine Indian traditions.
hari bhavanam
Trusted Taste | Since 1971
Gandhipuram | RTO | Peelamedu | Goldwins | Brookefields
Prozone | Avinashi | Sitra | Pothys Food Court
hotelharibhavanam
haribhavanam
SWIGGY
zomato
www.haribhavanam.com


• Sincerity
• Nobility
• Service
Building an Entrepreneurial Mindset
Through Our
Design Thinking FrameWork
SNS INSTITUTIONS
www.snsgroups.com
Coimbatore
Wishes
Happy 10th Anniversary
to
THE COVAI MAIL
95664 23456
www.snsgroups.com
/snsinstitutions

# கலைஞர் திட்டங்கள் ஏழை மக்களுக்கானது

**- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அப்பாவு**

'சட்டமன்ற நாயகர் கலைஞர்' விழாக்குழு கருத்தரங்கில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்குகிறார் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர்அப்பாவு.

✍ தி கோவை மெயில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இந்துஸ்தான் கலை அறிவியல்கல்லூரியில் சட்டமன்ற நாயகர் கலைஞர்எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அப்பாவு தலைமை வகித்து பேசுகையில், 'கலைஞர் ஆட்சிக் காலத்தில் தமிழக வளர்ச்சிக்கு கலைஞர் கொண்டுவந்த திட்டங்கள், ஏழை எளிய மக்களுக்கு பெரிதளவில் உதவும் வகையில் இருந்தது. இந்தியாவில் பெண் கல்வி வளர்ச்சியில் தமிழகம் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. இதற்கு காமராஜர், எம்.ஜி.ஆர்., மற்றும் கலைஞர் போன்ற முக்கிய தலைவர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர்' என்றார்.

இந்துஸ்தான் கல்லூரி செயலாளர் சரஸ்வதி கண்ணையன், மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா கார்த்திக் உள்ளிட்டோர் தலைமை வகித்தனர்.

பேச்சுத் திறமையில் சிறந்த 5 கல்லூரி மாணவர்கள், கலைஞரின் சாதனைகளைக் குறித்து வெவ்வேறு தலைப்புகளில் உரையாற்றினர். அவர்களுக்கு ஆதரவு பரிசாக ஊக்கத்தொகையும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற பேரவை அலுவலர்கள், மாவட்ட வருவாய்த் துறை ஆட்சியர், கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# கோவையின் நம்பர் 1 மருத்துவமனை கே.எம்.சி.ஹச்

✍ தி கோவை மெயில்

## தொடர்ந்து ஆறாவது ஆண்டாக முதலிடம் பெற்று சாதனை!

இந்திய மருத்துவ மனைகளில் செயல்திறனை ஆராய்ந்து அதனடிப்படையில் பிரபல ஆங்கில பத்திரிகையான தி வீக் வருடாவருடம் சர்வே நடத்தி வருகிறது.

**தி வீக் -ஹன்சா ரிசர்ச் சர்வே:**

இந்தியாவின் சிறந்த மருத்துவமனைகள் 2023 என்ற இதன் சமீபத்திய ஆய்வறிக்கையின்படி கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை இந்த வருடத்திற்கான கோவையின் நம்பர் 1 பல்துறை மருத்துவமனையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஆறாவது ஆண்டாக கேஎம்சிஹெச் இந்த அங்கீகாரம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. கடுமையான போட்டிகளுக்கிடையே இந்த விருதையும் அங்கீகாரத்தையும் தொடர்ந்து பெற்றுவருவது தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

தி வீக் பத்திரிகை சார்பில் பெங்களூர் நகரில் நடைபெற்ற விழாவில் கே.எம்.சி.ஹெச்

கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை முதன்மை செயல் அதிகாரி டாக்டர் சிவகுமரன் கோவையின் நம்பர் 1 பல்துறை மருத்துவமனை என்ற விருதைப் பெற்றுக்கொண்டார்.

மருத்துவமனை முதன்மை செயல் அதிகாரி டாக்டர் சிவகுமரன் கோவையின் நம்பர் 1 பல்துறை மருத்துவமனை என்ற பெருமைமிகு விருதைப் பெற்றுக்கொண்டார்.

இந்தியாவின் சிறந்த மருத்துவமனைகளை மதிப்பீடு செய்யும் தி வீக் ஹன்சா ரிசர்ச் சர்வே நாட்டின் முக்கிய மருத்துவமையங்களாக விளங்கும் தலைநகரப் பகுதியையும் இந்தியா முழுவதும் 17 நகரங்களிலும் தனது சர்வேவை மேற்கொண்டது. மக்கள் மத்தியில் பெற்றிருக்கும் நற்பெயர், மருத்துவர்களின் திறமை, உள்கட்டமைப்பு வசதிகள், ஆராய்ச்சி மற்றும் புதுமைகள், நோயாளிகளுக்கு சிறந்த மருத்துவ சேவை அளித்தல் ஆகிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த சர்வே நடத்தப்பட்டது.

"தி வீக் பத்திரிகையின் இந்த ஆய்வானது மருத்துவத் துறையினர் மத்தியில் மிகவும் செல்வாக்கு பெற்றது.

எங்களது தனிச்சிறப்பு வாய்ந்த மருத்துவ சேவைக்கும், மருத்துவமனையில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றும் ஊழியர்களின் திறமைக்கும் இந்த விருது ஒரு சிறந்த சான்றாகத் திகழ்கிறது. நகரில் நம்பர் 1 பல்துறை மருத்துவமனையாக தொடர்ந்து ஆறாவது ஆண்டாக விருது பெறுவது என்பது மிகவும் மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரிய விஷயமாகும். கோவை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்று, என்றும் நம்பிக்கைக்குரிய மருத்துவமனையாக திகழ்வதையே இந்த விருது சுட்டிக் காட்டுகிறது" என்று கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை தலைவரும் நிர்வாக இயக்குனருமாகிய டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி தெரிவித்தார்.

# ரூட்ஸ் நிறுவனங்கள் ரூ.10 லட்சம் மதிப்பில் வெள்ள நிவாரண உதவி

கோயமுத்தூரில் இயங்கி வரும் ஆட்டோமொபைல்ஸ் உதிரி பாகங்கள் தயாரிப்பு முன்னணி நிறுவனமான ரூட்ஸ் நிறுவனங்கள் சார்பில், மிக்ஜாம் புயல் மற்றும் வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்கு உதவும் வகையில், சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு ரூ. பத்து இலட்சம் மதிப்பில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஐந்து கிலோ அரிசி, பருப்பு, 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சிபாகா காலண்டரில் கோவையின் சிறந்த ஆளுமை மனிதர்கள்

✍ தி கோவை மெயில்

கோயமுத்தூர் கட்டுநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் (சிபாகா) மாதாந்திரக் கூட்டத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான சிபாகா காலண்டர், சிபாகா டைரி வெளியிடப்பட்டது.

சிபாகா சார்பில் ஒவ்வொரு வருடமும் ஒரு சிறந்த தலைப்பை அடிப்படையாகக் கொண்டு காலண்டர் மற்றும் டைரி வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு, கோயமுத்தூரின் வளர்ச்சிக்கு பங்களித்த சிறந்த ஆளுமை மிக்க 12 தொழில்முனைவோரை காலண்டரில் நினைவு கூர்ந்துள்ளனர்.

**சிறந்த 12 பேர் :**

எஸ்.பி.நரசிம்மலு நாயுடு, ராவ் பஹுதூர் ஏ.டி. திருவேங்கடசாமி முதலியார், பி.எஸ்.ஜி. சகோதரர்கள், சுவாமிக்கண்ணு வின்சென்ட், டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டி, ஜி.டி.நாயுடு, எஸ்.ஆர்.பி.பொன்னுசாமி செட்டியார், ஆர்.வெங்கடசுவாமி நாயுடு, ஜி.கே.தேவராஜுலு, டெக்ஸ்டூல் பாலசுந்தரம், டாக்டர் என்.மகாலிங்கம், எல்.ஜி. வரதராஜ்.

சிறப்பு அழைப்பாளர்கள் எஸ்.ஆர்.பி. பொன்னுச்சாமி செட்டியாரின் மகன் விஜயகுமார் பொன்னுச்சாமி மற்றும் கிருஷ்ணா ஆகியோர் காலண்டர், டைரியை வெளியிட்டனர்.

சிபாகாவின் தலைவர் சகாயராஜ், செயலாளர் செந்தில், டைரி கமிட்டி தலைவர் சுவாமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபாகா உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# மாதவிடாய் யோகா எப்படி உதவும்?



**தூட்டு, வீட்டுக்கு தூரம், வீட்டு விலக்கு, மாதவிலக்கு, மாதவிடாய்... பெண் உடலின் இயற்கையான நிகழ்வான உதிரப்போக்குக்குத்தான் எத்தனை பெயர்கள்! இதைப்பற்றிய தெளிவை உருவாக்குவதற்கு பதிலாக தவறான எண்ணப்போக்கே காலம்காலமாய் கட்டமைக்கப் பட்டிருக்கிறது.**

**மாதவிடாய் சுழற்சி என்பது என்ன? அதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு யோகா எப்படி உதவும் என்பதை விளக்குகிறார் டாக்டர் பவானி பாலகிருஷ்ணன்:**

சில நேரங்களில் உங்களுக்கு எளிதில் கோபம், எரிச்சல், அழுகை, உடல் மற்றும் மனச்சோர்வு ஏற்படுகிறதா? அல்லது உங்கள் குடும்பம் மற்றும் அலுவலகச் சூழ்நிலை உங்களுக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறதா?

ஆம் என்றால், உங்களுக்கு மாதவிடாய் வர இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன என்று கணக்குப் போடுங்கள். ஒருவேளை 14 முதல் 2 நாட்களாக இருக்கலாம். உடல் மற்றும் மன அளவில் வெளிப்படும் மேற்கண்ட அறிகுறிகளைத்தான் 'மாதவிடாய்க்கு முந்தைய நோய்க்குறிகள்' (pre menstrual syndrome) என்கிறோம்.

**'மாதவிடாய்க்கு முந்தைய நோய்க்குறிகள்' என்றால் என்ன?**

ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதவிடாய் வருவதற்கு 2 முதல் 14 நாட்களுக்கு முன் உடல் அளவிலும் மன அளவிலும் அசௌகரியமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. மாதவிடாய் தொடங்கியதும் இந்த அசௌகரியங்கள் மறைந்து விடுகின்றன. இந்த மாற்றங்கள் நடைபெறும்போது பல பெண்களேகூட அதை உணர்வதில்லை.

இவை சுமார் 70 சதவீதப் பெண்களின் அன்றாடச் செயல்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. மாதாமாதம் நடைபெறும் இந்த மாற்றங்கள் சில பெண்களின் வாழ்வையே முடங்கச் செய்துவிடும்!

**இந்த அசௌகரியங்கள் ஏன் ஏற்படுகின்றன?**

இதற்கு சரியான காரணம் தெரியவில்லை. ஆனால் ஈஸ்ட்ரோஜன் எனப்படும் ஹார்மோன் அளவில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதால் இந்த அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று நம்பப்படுகிறது. இந்த ஏற்றத்தாழ்வுகள் உடலின் இயற்கையான இயக்கத்தைப் பாதிக்கும்போது நோய் அறிகுறிகளாக வெளிப்படுகின்றன. மரபுவழி, சத்துக்குறைவு, மனம் மற்றும் நடத்தை சார்ந்த காரணங்களும் இந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணமாக அமையலாம்!

**மாதவிடாய்க்கு முந்தைய அறிகுறிகள்!**

வயிறு உப்புசம், பசியின் அளவில் மாற்றம், மார்பகங்களில் வலி அல்லது கனமாகத் தோன்றுவது, உடல் மற்றும் மனச்சோர்வு, தலைவலி, மூட்டு மற்றும் தசைகளில் வலி, முதுகு வலி, உடலில் நீர்கோர்த்துக்கொள்வது, எளிதில் உணர்ச்சி வசப்படுவது, குறிப்பிட்ட உணவுகளுக்காக ஏங்குவது, பதற்றம், அடிக்கடி மனநிலை மாறுவது, தூக்கமின்மை ஆகியன!

இந்த அறிகுறிகள் மாதத்துக்கு மாதம் வித்தியாசப்படலாம்!

பெண்கள் அதிகம் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவது, அதிக ஆபத்தான சூழ்நிலைகளில் அவர்களை ஈடுபடுத்திக்கொள்வது, குடும்பத்தார் மற்றும் அடுத்தவருடன் சண்டை போடுவது போன்றவை இந்த நேரங்களில்தான் அதிகம் நிகழ்வதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. சிந்திக்கும் திறன் பாதிக்கப்படுவதால் உணர்ச்சிவசப்பட்டு முடிவுகள் எடுப்பதே இதற்கு காரணமாகவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே இந்த நேரங்களில் உடலையும் மனதையும் நன்கு வைத்துக்கொள்வது மிகவும் அவசியம்!

**சிகிச்சை முறைகள்!**

♦ உடல் மற்றும் மனதில் ஏற்படும் மாறுதல்களைத் தொடர்ந்து குறித்துக் கொண்டு வந்தால், எந்த மாதிரிச் சூழ்நிலைகளின்போது அந்த மாறுதல்கள் நிகழ்கின்றன என்பதைக் கண்டறிந்து அந்த சூழ்நிலைகளுக்கான காரணங்களைத் தடுக்கலாம்.

♦ இந்த நேரங்களில் உப்பு மற்றும் கொழுப்பின் அளவைக் குறைத்து சாப்பிடவும்.

♦ காபி தவிர்ப்பது நல்லது.

♦ அதிக நார்ச்சத்துள்ள உணவை சாப்பிட வேண்டும்.

♦ திடீர் உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

♦ உடற்பயிற்சி மற்றும் யோகா செய்வது நல்லது.

♦ உடலிலும் மனதிலும் ஏற்படும் இந்த மாறுதல்கள் மிகவும் பாதிப்பாக இருந்தால், தகுந்த மருத்துவரைஅணுகவும்.

**யோகா எப்படி உதவுகிறது?**

யோகா நமது நரம்பு மண்டலத்தைதளர்வான நிலையில் இருக்கச் செய்கிறது. இதனால் எளிதில் உணர்ச்சி வசப்படுவது குறைகிறது. யோகா நமது ஹார்மோன்களின் அளவுகளை சமநிலைப்படுத்துகிறது.

யோகாவின் மூலம் நமது உடலையும் மனதையும் நம்மால் பிரித்துப்பார்க்க முடிகிறது. இதனால், நாம் செய்யும் செயல்களை நம்மால் கூர்ந்து கவனிக்க முடிகிறது. இதன்மூலம் விழிப்புணர்வு இல்லாமல் பதற்றமாக நாம்செய்யும் பல செயல்களைத் தடுக்க முடிகிறது.

யோகாசனங்கள் நமது உடலின் ரத்த ஓட்டத்தைச் சீர்செய்கிறது. வளர்சிதை மாற்றம் சீராவதால் குறிப்பிட்ட உணவுக்கான ஏங்குதல்கள் குறைகின்றன. ஆண்களும் ஒவ்வொரு மாதமும் பெண்களுக்கு ஏற்படும் இந்த அசௌகரியங்களைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டால் குடும்ப உறவுகள் மேம்படும்!

# நிவாரண உதவி வழங்கிய இந்துஸ்தான் கல்லூரி

✍ தி கோவை மெயில்

ஈங்கூரில் உள்ள இந்துஸ்தான் அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி சார்பில், சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.

கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் மற்றும் அலுவலகம் சாரா ஊழியர்கள் சார்பாக, சென்னை மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளான அத்யாவசியப் பொருட்களையும், சுமார் 2,000 பேருக்கு தேவையான அடிப்படைப் பொருட்களும் வழங்கப்பட்டன.

கடந்த 3 நாட்களாக பொருட்களை சேகரித்து, அதனை சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பதற்காக தனித்தனியாகப் பிரித்து, அப்பொருட்களை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் ராமன், செயலாளர் சரஸ்வதி, நிர்வாக செயலாளர் பிரியா மற்றும் கல்லூரியின் அனைத்து ஊழியர்களும் பங்கேற்றனர்.

# கதிரியக்கவியல் மனித குலத்திற்கு ஒரு முன்னேற்றம்

✍ தி கோவை மெயில்

சொசைட்டி ஆஃப் இந்தியன் ரேடியோகிராஃபர்ஸ் அன்ட் டெக்னாலஜிஸ்ட் மற்றும் எஸ்.என்.எஸ். கல்லூரி அலைடு ஹெல்த் சயின்ஸ் இணைந்து சர்வதேச கதிரியக்க தினத்தை கோயம்புத்தூர் குரும்பபாளையம் பகுதியில் உள்ள எஸ்.என். எஸ். இன்ஸ்டிடியூட் கல்லூரி வளாகத்தில் கொண்டாடியது.

இதில் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் டீன் நிர்மலா குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, மாணவர்களிடம் கதிரியக்கம் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்துகொண்டார்.

சிறப்பு அழைப்பாளர்கள் எஸ்.என்.எஸ். பொறியியல் கல்லூரி முதல்வர் செந்தூரப்பாண்டியன் மற்றும் கே.ஜி. ஹாஸ்பிடல் அண்ட் முதுநிலை மெடிக்கல் இன்ஸ்டிடியூட் டீன் மருத்துவர் குமரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து அண்ணா யுனிவர்சிட்டி பேராசிரியர் டாக்டர் தயாளன், கதிரியக்கம் பாதுகாப்பு குறித்து பேசினார். கே.ஜி. மருத்துவமனையின் ரேடியாலஜிஸ்ட் மருத்துவர் சபரீஷ் கதிரியக்கவியல் மனிதகுலத்திற்கு ஒரு முன்னேற்றம் எனக் கூறி கதிரியக்கவியலாளரின் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்தும் மாணவர்களிடையே கலந்துரையாடினர்.

அதற்கு முன்னர் சொசைட்டி ஆஃப் இந்தியன் ரேடியோகிராஃபர்ஸ் அன்ட் டெக்னாலஜிஸ்ட் தலைவர் வீரன்குட்டி வரவேற்றார். பொது செயலாளர் தேவராஜ் கதிரியக்கம் குறித்த விளக்கவுரை ஆற்றினார். இந்நிகழ்வில் கோழிக்கோடு, மைசூர், மதுரை, திருப்பூர், அவினாசி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள 50க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

# ஸ்மார்ட் சுமாரான சிட்டியா?

✍ தி கோவை மெயில்

டெக்ஸ்சிட்டி, காட்டன் சிட்டி, எஜுகேஷன் சிட்டி, மெடிக்கல் சிட்டி என்று பல பெயர்களால் அழைக்கப்படும் நமது கோயம்புத்தூர் தற்போது "ஸ்மார்ட் சிட்டி" என்று அடைமொழியுடன் அழைக்கப்படுகிறது. தொழில், வணிகம், கல்வி, மருத்துவ வசதிகளோடு திகழும் கோவை மாநகரம், தற்போது ஸ்மார்ட் சிட்டியாக வளர்ந்து இருக்கிறது. ஆனால் ஸ்மார்ட் சிட்டி என்ற பெயர் வேறு; மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களில் ஒன்றான ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு பல பணிகள் நடைபெறுவது வேறு. தற்போது வெளி மாவட்டங்கள், மாநிலங்களில் இருந்துகூட ஸ்மார்ட் சிட்டியைப் பார்வையிட்டனர்.

ஆனால், உண்மையாகவே நமது கோவை மாநகரம் ஸ்மார்ட் சிட்டியாக இருக்கிறதா என்ற கேள்விக்கு பதில் தேடினால், ஆம் என்று உறுதியாக சொல்ல முடியவில்லை. காரணம் என்னவென்றால், ஒரு நகரத்துக்கு ஸ்மார்ட் சிட்டி என்ற பெயரில் சில திட்டங்களுக்கு செலவு செய்வது என்பது வேறு, உண்மையாகவே வளர்ச்சிப் பணிகள் செய்து ஸ்மார்ட்டாக வைத்திருப்பது வேறு. இங்கே வரையறுக்கப்பட்ட சில திட்டங்களுக்கு செலவு செய்து சில வகை அலங்காரப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

உயர்வகை கல் பதித்த நடைபாதைகள், அலங்கார வளைவுகள், புதுமையான சிற்பங்கள், வண்ண விளக்குகள் என்று பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஊட்டி படகுத் துறையைப்போல வாலாங்குளத்திலும் படகு சவாரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் எந்த தவறும் இல்லை. இந்த வகையில்தான் ஸ்மார்ட் சிட்டி பணிகள் நடைபெற்றுள்ளன. என்றாலும் இந்த ஸ்மார்ட் சிட்டி பணிகளால் இங்குள்ள நகர மக்களுக்கு என்ன பயன் என்று தேடித்தான் பார்க்க வேண்டி இருக்கிறது. ஏராளமான தேவைகள், பல்வேறு காரணங்களால் குறிப்பாக நிதிப் பற்றாக்குறை காரணமாக நிறைவேற்றப்படாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், "ஐ லவ் யூ கோவை", " நம்ம கோவை" என்று போர்டு வைத்து செல்ஃபி எடுத்துக்கொள்வது அறிவுடைமை ஆகாது. பசியால் தவிக்கின்ற குழந்தைக்கு உணவு தராமல் அழகிய ஆடைகளும், பொம்மைகளும் தருவது போன்ற நிலைதான் இந்த ஏற்பாடுகளும் என்று சொல்ல வேண்டும்.

> **தனி மனிதனுக்கு வாழ்வில் சிக்கல்கள் இருப்பதுபோல கோவை மாநகராட்சிக்கும் பணி சிக்கல்கள் இருந்துகொண்டேதான் இருக்கும். அவற்றைத் தாண்டி செயல்படுவதுதான் 'ஸ்மார்ட்' என்று சொல்ல முடியும்.**

கல்பனா
மேயர்

சிவகுரு பிரபாகரன்,
மாநகராட்சி ஆணையாளர்

ஒரு நகரத்தின் உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படைத் தேவைகள் சரியாக இருந்தால்தான் மக்கள் இயல்பாக இயங்க முடியும். தேவையான வளர்ச்சியை அடைய முடியும். கோவையைப் பொறுத்தமட்டில் இன்னும் பல அடிப்படை மற்றும் உட்கட்டமைப்புகள் சீரமைக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இவற்றில் முதலில் வருவது, சாலைகள். தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்தபடியாக பெரிய நகரமாகவும், தொழில் வணிக நகரமாகவும் இருப்பது கோவை நகரமாகும். மேலும் இது கேரளா செல்ல முக்கிய பாதையாகவும் உள்ளது. எனவே போக்குவரத்து வசதிக்காக சாலைகள் என்பது மிக அத்தியாவசியமான ஒன்றாகும். கடந்த 10 ஆண்டுகளுக்குள் நமது நகரம் மிக விரிவடைந்து மக்கள்தொகையும், வாகனப் போக்குவரத்தும் பெருகி இருக்கிறது.

ஏற்கெனவே திட்டமிடாமல் வளர்ந்த நகரம் என்பதால் குறுகலான சாலைகள், இடப் பற்றாக்குறை, போக்குவரத்து நெருக்கடி என்று இருக்கிறது. கூடவே சாலை பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் என்பது இங்கு மிகவும் மோசமாக இருக்கிறது. கோவை மாநகராட்சியானது, தங்களுக்கு நிதிப் பற்றாக்குறை என்று காரணம் சொன்னாலும், சாலை வசதிகள் மற்றும் வாகனப் போக்குவரத்து என்பது மக்களின் பாதுகாப்பு தொடர்புடையதாகும்.

மொத்தமுள்ள 100 வார்டுகளில் எத்தனை சாலைகளில் குண்டு குழிகள் உள்ளன, மழை வந்தால் என்ன நிலைமைக்குப் போகும், அதனால் மக்கள் படும் சிரமம் என்ன என்பது இங்குள்ள கோவை மாநகர மன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவருக்கும் தெரியும். என்றாலும் தேவைக்கேற்ற சாலை வசதிகள் இதுவரை செய்து தரப்படவில்லை என்பதுதான் உண்மை.

வாலாங்குளத்தில் படகு சவாரி விடுவதைவிட அன்றாடம் பள்ளிகளுக்கும் மற்ற பணிகளுக்கும் மக்கள் போய் வருவதற்கான பாதுகாப்பான சாலை வசதிதான் முக்கியம்.

நவீன நுகர்வு கலாச்சாரத்தில் மக்களின் குப்பை உற்பத்தி அதிகரித்துக் கொண்டே போகிறது. குப்பை அகற்றுவது என்பது கோவை மாநகராட்சிக்கு பெரும் பணியாக மாறி இருக்கிறது. பல்வேறு முறைகளில் இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. என்றாலும் பல இடங்களில் இன்னும் சிறப்பாக செயல்படலாம் என்ற நிலைதான் இருக்கிறது.

அதேபோல தொலைநோக்குடன் சிந்தித்து வெள்ளலூர் குப்பைக் கிடங்கிற்கு ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டியதும் அங்கு அவசியமாகும். அடுத்து, வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சாக்கடை வழியாக பயணித்து அருகில் உள்ள நீர் நிலைகளான குளங்கள், நொய்யல் நதி போன்றவற்றில் கலப்பதை உடனடியாகத் தடுக்க வேண்டும். நகரப் பகுதிகளில் சேகரமாகும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்பட்ட பிறகுதான், வெளியில் விடப்பட வேண்டும். குளங்களை அழகுபடுத்துவதைவிட குளங்கள் அதன் இயல்பு நிலையில் இருக்க அனுமதிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக பெரியகுளம், வாலாங்குளம், சிங்காநல்லூர் குளம் ஆகியவற்றில் உள்ள நீர் பல வருடங்களாக அப்படியே நின்று கொண்டிருக்கிறது.

பெரும் மழைக்காலங்களில் தானே நிறைந்து வழியும் நீரைத் தவிர, மற்றபடி கழிவுநீர் கலந்து குளத்தில் மாசுகளுடன் அப்படியே நிற்கிறது. அவற்றில் உள்ள நீரை வடித்து, மறுபடியும் நீர் ஏற்றி, நிறைப்பதற்கு திட்டம் வேண்டும் என்று நீரியல் வல்லுநர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுவதை கோவை மாநகராட்சி கவனிக்க வேண்டும்.

கிருஷ்ணாபதி குளத்தை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் அழகுபடுத்தி இருக்கிறார்கள். 'ஆளில்லாத கடையில் டீ ஆற்றுவதுபோல' பெருமளவு மக்கள்நெருக்கம் இல்லாத பகுதிகளில் நடைபாதைகள், அலங்காரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் அதே இன்னொருபுறம் குளத்தின் கரை உடைந்து, சீரநாயக்கன்பாளையம் பள்ளி வளாகத்தில் நீர் தேங்கி நின்று கொண்டிருப்பது பத்திரிகை செய்தியாக வந்து பல நாட்களாகிறது.

தனி மனிதனுக்கு வாழ்வில் சிக்கல்கள் இருப்பதுபோல கோவை மாநகராட்சிக்கும் பணி சிக்கல்கள் இருந்துகொண்டேதான் இருக்கும். அவற்றைத் தாண்டி செயல்படுவதுதான் "ஸ்மார்ட்" என்று சொல்ல முடியும். அதற்கு மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

150 ஆண்டுகள் வரலாறும், பழமையும், பெருமையும் கொண்ட உள்ளாட்சி அமைப்புதான் நமது கோயம்புத்தூர் மாநகராட்சி. அது தன் குறைகளை எல்லாம் களைந்து, உண்மையான ஸ்மார்ட் சிட்டியை நல்லவிதமாக, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளோடு உருவாக்கும் என நம்புவோம்!

## அனன்யா'ஸில் நியூ இயர் எக்ஸ்போ..!

கோவை கஸ்தூரிநாயக்கன்பாளையத்தில் உள்ள அனன்யா"ஸ் நானா நானி'ஸ் ஹோம்ஸ் வளாகத்தில் நடைபெற்ற 'கிராண்ட் நியூ இயர் எக்ஸ்போ 2024'ல் அனன்யா"ஸ் நானா நானி'ஸ் இணை நிர்வாக இயக்குநர் உமா மகேஸ்வரி யுவராஜ், ரிப்பன் வெட்டி விழாவைத் துவக்கி வைத்து அரங்குகளைப் பார்வையிட்டார்.

## உரிமைகள் பாதுகாப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி

சிறப்பு விருந்தினர் கல்கி சுப்ரமணியத்துடன் பங்கேற்பாளர்கள்.

✍ தி கோவை மெயில்

இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியின் சமூகப் பணித் துறை, புது தில்லியின் சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகம் ஆகியன இணைந்து மூன்று நாள் திறன் மேம்பாட்டுத் திட்ட நிகழ்வு 'திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2019' என்ற தலைப்பில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர் பொள்ளாச்சி சஹோதரி அறக்கட்டளையின் நிறுவனர் கல்கி சுப்ரமணியம், திருநங்கைகள் கைவிடப்படுவதற்கான காரணங்கள், எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்தும், வாழ்க்கையில் தனது சாதனைகள் மற்றும் இலக்குகள், திருநங்கைகள் தங்கள் இலக்குகளை அடைந்து மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ முடியும் என்றும் பங்கேற்பாளர்களிடம் எடுத்துரைத்தார்.

கல்லூரி முதல்வர் பொன்னுசாமி, சமூகப் பணித் துறைத் தலைவர் புனிதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஆவின் பால் தொழிற்சாலையைப் பார்வையிட்டனர் வி.எல்.பி. மாணவர்கள்

✍ தி கோவை மெயில்

வி.எல்.பி. ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதுகலை மற்றும் ஆராய்ச்சித் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பிரிவு சார்பாக பச்சாபாளையத்தில் உள்ள ஆவின் பால் தொழிற்சாலைக்கு தொழில்சார் கல்விப் பயணம் (Industrial Visit) மேற்கொண்டனர்.

அங்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி பதப்படுத்தப்பட்ட பல்வேறு வகையான பால் மற்றும் பால் பொருட்களைத் தயாரிப்பது குறித்த அறிவைப் பெற்றனர். பதப்படுத்தப்பட்ட பால் பேக்கேஜ் செய்யப்படும் முறை, ஏற்றுமதி செய்யப்படும் நிலை, பால் சேமிப்பு ஆகியவற்றை கண்டனர்.

மேலாண்மைத் துறை மாணவர்கள் 41 பேர், இ.டி.சி. துறையிலிருந்து 29 மாணவர்கள், மூன்று ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கோவையும் ஹைதர் அலியும்

பள்ளிவாசலின் தோற்றம்

**மாலை நேரங்களில் அனைத்து சாதிமதத்தை சேர்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பள்ளிவாசலிற்கு வந்து மந்திரித்து, தங்களை குணப்படுத்தி செல்கின்றனர்.**

✍ வெ.சீ.அனிஷா, தி கோவை மெயில்

இஸ்லாமிய மக்கள் தொழுகைக்காக ஒன்றுகூடும் இடமாகத் தொழுகை செய்யப்படுவதே பள்ளிவாசல்களின் முக்கியப் பயன்பாடாகும். இஸ்லாமியர்களுக்கு, சமூக மற்றும் சமய முக்கியத்துவம் உள்ள இடங்களாகப் பள்ளிவாசல்கள் விளங்குவது மட்டுமன்றி, அவற்றின் வரலாறு மற்றும் கட்டடக்கலை அம்சங்களுக்காக உலக அளவில் பிரபலமாக உள்ளன.

அந்த வகையில் திப்பு சுல்தானால் வழங்கப்பட்ட கோயம்புத்தூர் பூமார்க்கெட் பகுதியில் உள்ள ஹைதர் அலி திப்புசுல்தான் தக்னி சுன்னத் ஜமாத் மஜ்ஜித், மிக பிரபலமான பள்ளிவாசலாகத் திகழ்கிறது.

திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் ஹைதர் அலியின் ஆட்சி காலத்தில் திண்டுக்கல், பெரியகுளம், உத்தமபாளையம் போன்ற இடங்களில் அரசின் உதவியுடன் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. இங்குள்ள ஹைதர் அலி திப்புசுல்தான் தக்னி சுன்னத் ஜமாத் மஜ்ஜித் கபருஸ்தான் மற்றும் ஈத்கா சுமார் 7 ஏக்கர் நிலம் 1784 க்கு முன் ஹைதர் அலி திப்பு சுல்தானால் வழங்கப்பட்டது. மைசூர், கோவை, பாலக்காடு உள்ளிட்ட பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கு தனது படைகளுடன் இங்கு வருகை தந்து தங்குவதற்காக ஏற்பாடு செய்திருந்தனர். அப்போது இந்த இடத்தை மயானத்திற்காகவும், பள்ளிவாசலுக்காகவும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அன்றைய கால கட்டத்தில் இருந்து தக்னி எனும் உருது பேசும் இஸ்லாமியர்களால் இப்பள்ளிவாசல் பாதுகாத்தும், பராமரிக்கப்பட்டும் வருகிறது.

கோவை மாவட்டம் மட்டுமல்லாமல் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் இந்த ஹைதர் அலி திப்புசுல்தான் பள்ளிவாசலுக்குத் தொழுகை நடத்த வருவது சிறப்பாகும்.

**சிறப்பு**

மாமன்னன் ஹைதர் அலி திண்டுக்கல் அரண்மனையில் இருந்த வேளையில் கோவை, மலபார் போன்ற பகுதிகள் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. அப்போது கோவை பகுதிக்கு மன்னாராகத் தேர்ந்தேடுக்கப்பட்டார் திப்பு சுல்தான். அந்தக் காலகட்டத்தில் பூ மார்க்கெட் அருகில் உள்ள லங்கர் கானா தெருவில் ஏழை எளிய மக்கள் உண்ணாமல் உறங்கக் கூடாது என்பதை கருத்தில் "உண்ணாமல் உறங்காது" திட்டதைத் தொடக்கி வைத்தார். அப்போது தொடங்கி இப்போது வரை ஜமாத்தின் சார்பாக இரவு 7.30 மணி அளவில் உணவு அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஹைதர் அலி, இஸ்லாமியர்களுக்கு இடம் அளித்ததுபோலவே இந்து சமய மக்களுக்கும் கோயில்கள் கட்டிக் கொடுத்துள்ளனர். அந்த வகையில், கோவையில் பிரபலமாக உள்ள தண்டு மாரியம்மன் கோயில் 1795 ஆம் ஆண்டு திப்பு சுல்தானால் கட்டிக்கொடுக் கப்பட்டுள்ளது.

ஒருசமயம், அந்தக் கோயில் இருந்த இடத்தில் திப்பு சுல்தான், அவரின் படைகளைத் தங்க வைத்தார். அப்போது அந்தப் படையில் இருந்த இந்து சமய வீரனுக்கு அம்மை நோய் ஏற்பட்டது. அச்சமயத்தில் அங்கே இருக்கும் தண்டை எடுத்து, தனது உடல் மேல் தேய்த்து விடுகிறார் அம்மன். அவரின் கனவில் இவ்வாறு தண்டுமாரியம்மன் தோன்றியதால், இதனை திப்பு சுல்தானிடம் சென்று கூறுகிறார். இந்த இடத்தில் தண்டு மாரியம்மன் கோயில் நிறுவ வேண்டும் என்பதை திப்பு சுல்தான் கருத்தில் கொண்டு தனது 165 படை வீரர்களைக் கொண்டு 13 மாதத்தில் இக்கோயில் கட்டப்பட்டது சிறப்பாகும்.

அதேபோல், பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயிலுக்கும் திப்பு சுல்தான் பல்வேறு மானியங்கள் அளித்துள்ளார். இன்றைய நாள் வரையிலும் தீவட்டி சலாம் எனும் பெயரில் மாலை 5.30 மணிக்கு திப்புவின் பெயரில் பூஜை நடைபெறுகிறது என்பது சிறப்பாகும்.

இதுபோன்று அனைத்து சமுதாய மக்களுக்கு உதவிய திப்பு சுல்தானின் பெயரில் இருக்கும் இந்தப் பள்ளிவாசலில் அனைத்து மக்களுக்கும் மருத்துவ உதவி வழங்கப்படுகிறது. இந்தப் பள்ளிவாசலில் மக்கள் இணைப்புடன் இருப்பதற்கு சிறந்த நூலகம், சிறந்த மருத்துவம் போன்ற வசதிகளும் வரும் காலத்தில் செய்யப்படவுள்ளது.

**சேவைகள் :**

திப்பு சுல்தானின் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு மாலை நேரங்களில் அனைத்து சாதி, மதத்தைச் சேர்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பள்ளிவாசலிற்கு வந்து மந்திரித்து, தங்களைக் குணப்படுத்திச் செல்கின்றனர். மாலை 6.45 முதல் 8.00 மணி வரையில் வரும் மக்களுக்கு குருமார்கள் எந்தவித கைம்மாறும் எதிர்பார்க்காமல் மந்திரித்து விடுவது குறிப்பிடத்தக்கது.

தொழுகை இடம்

# வாழ்நாள் சாதனையாளர் விருது வென்ற டாக்டர் ஜி.பக்தவத்சலம்

## இந்தியத் தொழில் கூட்டமைப்பு விருது வழங்கி கௌரவம்

கே.ஜி. மருத்துவமனை மற்றும் முதுகலை மருத்துவக் கழகத் தலைவர் டாக்டர் ஜி. பக்தவத்சலத்திற்கு இந்தியத் தொழில் கூட்டமைப்பு சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

இந்தியத் தொழில் கூட்டமைப்பு தமிழ்நாடு மெட்கிளேவ்2023 நிகழ்ச்சியில் 'ஹெல்த்கேர் 4.0: டிகோடிங் டிஜிட்டல்' என்ற கருப்பொருளில் மெட்கிளேவ் நிகழ்ச்சியானது சென்னையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சுகாதார அமைப்பின் வெற்றிக்கான முக்கியமான தேவைகள் குறித்தும், டிஜிட்டல் மாற்றம், சுகாதாரத்தில் செயற்கை நுண்ணறிவு, ஸ்டார்ட் அப் மற்றும் புத்தாக்கம், அரசாங்க முயற்சிகள் மற்றும் டிஜிட்டல் ஆரோக்கியத்தில் ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் மருத்துவமனைகளில் டிஜிட்டல் மயமாக்கலைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் தீர்வுகள் மூலம் சுகாதாரப் பாதுகாப்பு சங்கிலியில் உள்ள இடைவெளிகள் குறித்த கருத்தரங்கு அமர்வுகள் நடைபெற்றன.

இந்தியா முழுவதிலும் இருந்து 500க்கும் மேற்பட்ட மருத்துவத்துறை வல்லுநர்கள் பங்கேற்ற தமிழ்நாடு மெட்கிளேவ் நிகழ்ச்சியில், கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் டாக்டர்.ஜி.பக்தவத்சலத்திற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இது தொடர்பாக அவருக்கு வாழ்த்து தெரிவிக்க அழைத்தபோது, ரேபிட் ஃபயர் கேள்விகளைக் கேட்டோம். அந்த கேள்வி பதில் விவரங்கள் உங்களுக்காக...

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற டாக்டர்.ஜி.பக்தவத்சலம். உடன், டாக்டர் இளங்குமரன் கலியமூர்த்தி, டாக்டர் சந்திரகுமார், சங்கர் வானவராயர், டாக்டர் சதீஷ் தேவதாஸ் ஆகியோர்.

**எய்ட்ஸ் பரவல் எப்படி இருக்கு?**

முந்தைய காலங்களை ஒப்பிட்டு பார்க்கையில், எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு மக்களிடம் பரவலாக சென்றடைந்து உள்ளது. அந்தவகையில், நோய் பரவும் விகிதம் சற்று குறைந்துள்ளது. இதில், குறிப்பிட்டுச் சொன்னால் டி.பி.எனப்படும் காசநோய் இந்தியர்களை அதிகளவில் பாதிக்கிறது.

**இதய நோய் பாதிக்கும் நபர்கள் யார்?**

ஏழை, பணக்காரர், ஆண், பெண் என்று எவ்வித பாகுபாடும் பாராமல் இதய நோய் அனைவரையும் பாதிக்கும். கூடுமானவரை வீட்டில் சமைத்த உணவுகளை சாப்பிடுங்கள். துரித உணவுகளை அறவே தவிர்த்து விடுங்கள். தினசரி நடைப்பயிற்சி, உடற்பயிற்சி, யோகா போன்று ஏதேனும் ஒன்றை செய்து வாருங்கள்.

புகை பிடித்தல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்கள் உள்ளவர்களுக்கு இதயம் சம்பந்தமான நோய்கள் எளிதில் பாதிக்கும் அபாயம் உண்டு. ஆகவே, இதயம் சார்ந்த நோய் பாதிக்கப்பட்டவர்கள் 'லோடிங் டோஸ்' என்னும் உயிர் காக்கும் மாத்திரைகளைக் கட்டாயம் சட்டைப் பையில் வைத்திருக்க வேண்டும்.

**இந்தியர்களை அதிகம் தாக்கும் புற்றுநோய் எது?**

பெண்களுக்கு மார்பக புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய், கருப்பை புற்றுநோய் ஆகியவை அதிகம் பாதிக்கிறது.

மேலும், புரோஸ்டேட் *(prostate)* புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் (புகைப்பிடிப்பதால் வருகிறது) போன்றவை அதிகமாக ஆண்களைத் தாக்கும் புற்றுநோய்கள். இதில், புரோஸ்டேட் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிய *Prostate-Specific-Antigen* என்ற பரிசோதனை செய்து கொள்ளலாம்.

**உயர் ரத்த அழுத்தத்தின் சராசரி அளவு?**

இன்றைய நிலையில் பிபி என்னும் உயர் ரத்த அழுத்தம் பெரும்பாலானவர்களிடம் அதிகம் காணப்படுகிறது. சராசரி அளவு என்றால் 120 தான். இருப்பினும், 138/88 வரையில் பயப்படத் தேவையில்லை. அதே சமயம், மருத்துவர் ஆலோசனை பெற வேண்டியது கட்டாயம். கே.ஜி மருத்துவமனையில் அனைத்து நோயாளிகளுக்கும் உயர் ரத்த அழுத்தப் பரிசோதனை செய்து வருகிறோம்.

**சுகப் பிரசவம் விகிதம் குறைந்து வருகிறதே?**

சிம்பிள். வாழக்கைமுறை மாற்றம் தான். குறிப்பிட்ட வயதுக்குள் பெண்கள் கருத்தரித்தல் வேண்டும். காலம் கடந்த திருமணம், 35 வயதுக்கு மேல் குழந்தை பெற்றுக் கொள்வது, உணவுப் பழக்கம், போதிய நடைப்பயிற்சி இல்லாது இப்படியாகப் பல காரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். அன்றாடம் வாழக்கை நடைமுறையில் கட்டாயம் மாற்றம் வேண்டும்.

**சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்த முடியுமா?**

முடியாதது இவ்வுலகில் எதுவும் இல்லை. சர்க்கரை நோய்க்கு கட்டுப்பாடு மிகவும் அவசியம். ஏனெனில், உடல் உறுப்புகளில் சிறிது சிறிதாகப் பாதிப்புகளை ஏற்படுத்தி முற்றிலும் செயலிழக்கச் செய்துவிடும். இது ஒரு உயிர்க்கொல்லி நோய் என்பதால், உணவுக் கட்டுப்பாடு, முறையான மருத்துவ பரிசோதனைகள் அவசியம். உணவுக்கு முன்; பின் எனச் சர்க்கரை பரிசோதனை மேற்கொண்டு அதற்கான மருத்துவ ஆலோசனைகள் பெற வேண்டும்.

# ஹோண்டா சிபி 350 அறிமுகம்

கோவையில் பிரபலமான சூர்யபாலா மோட்டார்ஸின் பிக்விங் ஷோரூமில் ஹோண்டா சிபி 350 என்ற புதிய இரண்டு சக்கர வாகனத்தின் அறிமுக விழா வெள்ளிகிழமை நடைபெற்றது.

காவேரி மருத்துவமனை
இப்போது புதுச்சேரியில்
காவேரி மருத்துவமனை
இதயம் & நுரையீரல் சிகிச்சை
தொடர்பான
சிறப்பு மருத்துவ ஆலோசனை முகாம்

Dr. ராம். D
MBBS., MS(General Surgery)., MCh - CTVS ( JIPMER)., Fellowship in Adult Cardiothoracic Surgery and Thoracic organ Transplantation (Auckland, New Zealand)., Fellowship in Advanced adult cardiac surgery and Mechanical Circulatory Support (Toronto, Canada)..
சிறப்பு இதயம் & நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்
காவேரி மருத்துவமனை, ஆழ்வார்பேட்டை & வடபழனி

கரோனரி ஆர்டரி டிசிஸ் மற்றும் பைபாஸ் அறுவை சிகிச்சை, நெஞ்சு வலி, படபடப்பு, கால் வீக்கம், நுரையீரல் செயலிழப்பு, நுரையீரல் டிபி, ஒழுங்கற்ற இதயத் துடிப்பு, இரத்த குழாய் மாற்று அறுவை சிகிச்சை மற்றும் இதயம் & நுரையீரல் சார்ந்த நோய்கள் பற்றிய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஆலோசனை பெறலாம் .

20 டிசம்பர் 2023, புதன்கிழமை
காலை 11 மணி முதல் மதியம் 4 மணி வரை
காவேரி மருத்துவமனை தகவல் மையம்
எண். 79, புஸ்ஸி வீதி, மிஷன் தெரு கட்டிங், புதுச்சேரி - 605 001.
முன்பதிவிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 78248 68611

# இந்தியாவில் கல்வி அறக்கட்டளைகள் அதிகம்

**-கிருஷ்ணதாஸ்**, நிர்வாக அறங்காவலர், நேரு கல்விக் குழுமம்

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற பேராசிரியர்கள் ருக்மணி, பொன்முருகன். உடன், நேரு கல்விக் குழுமங்களின் நிர்வாக அறங்காவலர் கிருஷ்ணதாஸ், தலைமை நிர்வாக அதிகாரியும் செயலருமான கிருஷ்ணகுமார், நிர்வாக இயக்குநர் நாகராஜா, சிறப்பு விருந்தினர் கரிமா குப்தா, கலை அறிவியல் கல்லூரி முதல்வர் அனிருதன், பேராசிரியர் ராஜேந்திரன்.

✍ தி கோவை மெயில்

**நேரு கல்வி குழுமம் சார்பில் நல்லாசிரியர்களுக்கான விருதுகள்**

தமிழகம், கேரளத்தில் இயங்கி வரும் நேரு கல்விக் குழுமம் சார்பில் ஆண்டுதோறும் பிற பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் சிறப்பாகக் கல்விப் பணியாற்றும் சிறந்த முதுநிலை பேராசிரியர்கள் மற்றும் இளநிலை பேராசிரியர்களுக்கான, பி.கே.தாஸ் நினைவு சிறந்த பேராசிரியர் விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான 15 ஆவது விருது வழங்கும் விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நேரு கலை, அறிவியல் கல்லூரி முதல்வர் அனிருதன் வரவேற்றார். தலைமை வகித்த நேரு கல்விக் குழுமங்களின் நிர்வாக அறங்காவலரும் வழக்கறிஞருமான கிருஷ்ணதாஸ் பேசுகையில், 'மற்ற நாடுகளை ஒப்பிடுகையில் இந்தியாவில் கல்விக்கான அறக்கட்டளைகள் அதிகம். ஃபின்லேண்ட் போன்ற நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் கல்வி முறைகளைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறோம்.

தேசிய கல்விக் கொள்கையை முறையாகப் பின்பற்றினாலே கல்வியில் முன்னோடியாகத் திகழலாம். நேரு கல்விக் குழுமத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் மாணவர்களின் திறன்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு திறன் மேம்பாட்டுத் துறைகள் செயல்பட்டு வருகிறது' என்றார்.

சிறப்பு விருந்தினர் மத்திய அரசின் கீழ் இயங்கும் உயிர் தொழில்நுட்பவியல் பிரிவின் தலைவர் கரிமா குப்தா, ஆசிரியர் பணியின் முக்கியத்துவங்கள் குறித்து உரையாற்றினார். நேரு கல்விக் குழும நிர்வாக இயக்குநர் நாகராஜா பேசினார். தமிழகம், கேரளம், கர்நாடகம், ஜெய்ப்பூர் உள்ளிட்ட 7 மாநிலங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட முதுநிலைப் பேராசிரியர்கள் 12 பேருக்கும், இளநிலைப் பேராசிரியர்கள் 6 பேருக்கும் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருது 2 பேருக்கும் பி.கே.தாஸ் நினைவு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. துணை ஒருங்கிணைப்பாளர் சுவர்ணலதா நன்றி கூறினார்.

**பேராசிரியர்களை ஊக்குவிக்க வேண்டும்**

கிருஷ்ணகுமார், தலைமை நிர்வாக அதிகாரி, நேரு கல்விக் குழுமம்,

'20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், மூவாயிரத்துக்கும் அதிகமான துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் பணிபுரியும் நேரு கல்விக் குழுமம் பொறியியல், ஆர்க்கிடெக், மருத்துவம், கலை, அறிவியல், ஏரோநாட்டிக்கல் எனப் பன்முகத்தன்மையுடன் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது' என்றார்.

**வாழ்நாள் சாதனையாளர் விருது**

ருக்மணி, பேராசிரியர், மருந்தியல் தொழில்நுட்பத் துறை, அண்ணா பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி

பொன்முருகன், இணைப் பேராசிரியர், தாவரவியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

**சிறந்த முதுநிலை பேராசிரியர் விருது**

நீல் கமல் புரோஹித், இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், வர்த்தகம், எஸ்.எஸ். ஜெயின் சுபோத் பி.ஜி. கல்லூரி, ஜெய்ப்பூர்

தீபா பார்வதி, இணைப் பேராசிரியர், உயிரியல், ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழகம், சென்னை

ஜெயலட்சுமி, இணைப் பேராசிரியர், மொழியியல் ஹிந்தி, வேலூர் தொழில்நுட்பம் நிறுவனம், வேலூர்

மரிய யேசுராஜா, பேராசிரியர் மற்றும் தலைவர், சமூக பணி, ஸ்ரீ நாராயணகுரு கல்லூரி, கோயம்புத்தூர்

வினிதா, இணைப் பேராசிரியர், இயற்பியல், வேலூர் தொழில்நுட்பம் நிறுவனம், வேலூர்

ராஜேஷ் கண்ணா, உதவிப் பேராசிரியர், கம்ப்யூட்டர் சயின்ஸ், கிறிஸ்ட் பல்கலைக்கழகம், பெங்களூர்

முத்தப்பா எம் பெகாலி, இயக்குநர் மற்றும் பேராசிரியர், மேனேஜ்மெண்ட், ஈஸ்ட் பாயிண்ட் குரூப் நிறுவனங்கள், பெங்களூர்

ஜெகநாதன், பேராசிரியர் மற்றும் தலைவர், எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் டாக்டர் என்.ஜி.பி. இன்ஸ்டிடியூட் ஆஃப் தொழில்நுட்பம், கோயம்புத்தூர்

விஜயசித்ரா, பேராசிரியர், எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங், கொங்கு பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர்

பாலகிருஷ்ணன், தலைவர், ஆராய்ச்சி, கம்ப்யூட்டர் சயின்ஸ், ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரி பொறியியல் மற்றும் தொழில்நுட்பம்,கோயம்புத்தூர்

நிதி, இணைப் பேராசிரியர், மெக்கானிக்கல் இன்ஜினியரிங், எம்.பி. பொறியியல் கல்லூரி, திருவனந்தபுரம்

அனுஷா, பேராசிரியர் மற்றும் தலைவர், சிவில் இன்ஜினியரிங், கே.பி.ஆர். இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஜினியரிங் மற்றும் தொழில்நுட்பம், கோயம்புத்தூர்

**சிறந்த இளநிலை பேராசிரியர் விருது**

ஜெயஸ்ரீ, உதவிப் பேராசிரியர், வர்த்தகம், கிறிஸ்துஜெயந்தி கல்லூரி, பெங்களூர்

நரேஷ்குமார் மணி, இணைப் பேராசிரியர், உயிரியல், மணிப்பால் தொழில்நுட்பம் நிறுவனம், மணிப்பால்

சத்யா, உதவிப் பேராசிரியர், மொழியியல், பான் செகோர்ஸ் பெண்கள் கல்லூரி, தஞ்சாவூர்

சுதாகர், இணைப் பேராசிரியர், அறிவியல் - கணிதம், வேலூர் தொழில்நுட்பம் நிறுவனம், ஆந்திரப்பிரதேஷம்

பிரபு, உதவிப் பேராசிரியர், மேனேஜ்மெண்ட் எஸ்.ஆர்.எம். இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் மற்றும் தொழில்நுட்பம், சென்னை

டெனி, உதவிப் பேராசிரியர், எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங், கலசலிங்கம், கலசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி நிலையம் ஸ்ரீவில்லிபுத்தூர்

# இனிமேல் சிசேரியனுக்கு 'குட்பை'

மகப்பேறுக்கு முந்தைய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதுடன், பாதுகாப்பான மற்றும் நிறைவான பிரசவ அனுபவத்திற்கு அமைதியான சூழல்.

**விமன்ஸ் சென்டர் மருத்துவமனையில் சுகப் பிரசவத்திற்கான புதுவித அணுகுமுறை**

✍ தி கோவை மெயில்

கர்ப்பிணிகளுக்கு அமைதியான மற்றும் தன்னம்பிக்கையுடன் கூடிய பிரசவ அனுபவத்தை மேம்படுத்தும் நோக்கில் விமன்ஸ் சென்டர் பை மதர்ஹூட் மருத்துவமனையில் "இயற்கையான குழந்தை பிறப்பு மையம்" தொடங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சிசெக்சன் எனும் அறுவை சிகிச்சை பிரிவு பிரசவங்களின் அதிகரிப்பு விகிதத்தை குறைக்கும் வகையில், இயற்கையான பிரசவத்திற்கான விரிவான அணுகுமுறையை விமன்ஸ் சென்டர் மையம் அறிமுகப்படுத்தியுள்ளது. பெண்களுக்கான வேதனை நிறைந்த பிரசவ அனுபவங்களை நீக்குவதற்கான அர்ப்பணிப்புடன் கூடிய இணையற்ற பேருதவி, தனிப்பட்ட கவனிப்பு மற்றும் குறைந்தபட்ச இடையூறுகள் வழங்குவதில் கவனம் செலுத்தி வருகிறது.

இந்த சிறப்புமிக்க முயற்சி தாய்சேய் இருவருக்கும் பாதுகாப்பான மற்றும் நேசத்திற்குரிய குழந்தைப்பேறு பயணத்தை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பிரசவ அனுபவத்தை மாற்றியமைப்பதே எங்கள் நோக்கம்

**- மிருதுபாஷினி கோவிந்தராஜன்**

இது தொடர்பாக, விமன்ஸ் சென்டர் பை மதர்ஹூட் மைய இயக்குநர் டாக்டர் மிருதுபாஷினி கோவிந்தராஜன் கூறுகையில், 'இயற்கையான குழந்தை பிறப்பு தொகுப்பு மகப்பேறு பராமரிப்பில் ஒரு புரட்சியைக் குறிக்கிறது. பிரசவ அனுபவத்தை மாற்றியமைப்பதே எங்கள் கவனம். பிரசவ எதிர்பார்ப்புள்ள தாய்மார்களுக்கு அமைதியான மற்றும் நம்பிக்கை அளிக்கும் சூழலை வழங்குகிறது. தனிப்பட்ட நலன் மற்றும் முழுமையான ஆறுதலுடன் கூடிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து, ஒவ்வொரு பிரசவ பயணத்தையும் மறக்க முடியாததாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். பிரசவம் மற்றும் பிரசவத்தின்போது தாய்மார்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகிறோம்.

இதில், நீர் சிகிச்சை, இசை சிகிச்சை, நறுமண சிசிச்சை, தனித்துவ சிகிச்சைகள், மசாஜ், சூடான மற்றும் குளிர் அழுத்தம், சுவாச நுட்பங்கள் தோலுக்கு தோல் சிகிச்சை, தாமதமான தொப்புள் கொடி இறுக்குதல், முன்கூட்டியே ஊட்டுகளுக்கான தொடங்குதல் மற்றும் பிரசவ பந்துகள் மற்றும் பீநட் பந்துகளை உள்ளடக்கிய பிரசவ உறுதுணை கருவிகள் கொண்டு இயற்கை முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**அனுபமா குமார் விஜய் ஆனந்த், பிரசவ கல்வியாளர்**

உயர் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்ட தொடக்க விழாவில் பிரசவ கல்வியாளர் விருக்ஷம் மகப்பேறு நல கல்வி மையத்தின் நிறுவனர் அனுபமா குமார் விஜய்ஆனந்த், பிரசவம் பற்றிய விரிவான அணுகுமுறையைப் பாராட்டினார்.

**டாக்டர் செல்வநந்தினி, ஆலோசகர், கரு மருத்துவம்**

கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு அவர்களின் கர்ப்ப காலம் முழுவதும் தனிப்பட்ட கவனிப்பு மற்றும் கல்வியை வலியுறுத்தி விமன்ஸ் சென்டர் பை மதர்ஹூட் மையத்தின் கரு மருத்துவ ஆலோசகர் டாக்டர் செல்வநந்தினி பேசுகையில், விமன்ஸ் சென்டர் பை மதர்ஹூட் மருத்துவமனையின் இயற்கையான குழந்தை பிறப்பு மையம், மகப்பேறுக்கு முந்தைய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதுடன், பாதுகாப்பான மற்றும் நிறைவான பிரசவ அனுபவத்திற்கு அமைதியான சூழலை வழங்குகிறது,

கர்ப்ப காலம் முழுவதும் தாய்சேய் நல்வாழ்வைக் கண்காணிப்பதற்கும், இயற்கையான பிரசவத்தை ஊக்குவிக்க தனிப்பட்ட கல்வி, ஆலோசனை மற்றும் மகப்பேறுக்கு முற்பட்ட பராமரிப்பு ஆகியவற்றை வழங்குவதற்கும் மையத்தின் உறுதிப்பாட்டை விளக்கினார்.

அனுபவம் வாய்ந்த மருத்துவ வல்லுநர்கள், பிசியோதெரபிஸ்ட் மற்றும் பிரசவக் கல்வியாளர்களால் எளிதாக்கப்படும் பாதுகாப்பான மருத்துவமனை அமைப்பிற்குள் தனிப்பயனாக்கப்பட்ட இயற்கையான பிறப்பு அனுபவத்தை வழங்குவதை விமன்ஸ் சென்டர் பை மதர்ஹூட் மருத்துவமனை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# GKNM Hospital's 21st Cardiothoracic Workshop

✍ The Covai Mail

The 21st annual workshop hosted by the Department of Cardiothoracic Surgery at GKNM Hospital took place on December 1st and 2nd, 2023. Started in 1998 the annual workshops of GKNMH has created a niche and grown to be one of the best meetings in the country. Each year, the event spotlights a specific area of the specialty, featuring global leaders who share their expertise.

This year's focus was on the aortic valve and root, with distinguished faculty Prof Laurent De Kerchove from Brussels and Prof Ruggero De Paulis from Rome who are the world leaders in aortic valve repair and root surgery. Prof Ruggero was the past President of the European Association and the inventor of Valsalva graft. The keynote address was delivered by Prof Hector Michelena from Mayo Clinic, alongside other notable speakers like Dr Chandrasekar from Mayo Clinic, Dr JaiRaman from Melbourne and Dr Bashi from Chennai.

With 204 delegates from across the country and Southeast Asia, the workshop showcased six diverse cases, complemented by lectures and videos for an enriched learning experience.

A collection of 85 videos of the past 20 years has been archived in the cloud for anyone to access as a great learing tool and was launched during the workshop.

Team liveSURGE once again showcased their skills to produce another great workshop filled with strong scientific content.

*Video Lectures showcasing Cardiothoracic Surgery*

# KASC Workshop Explores Solutions to Noyyal River Pollution

*C.A. Vasuki, Secretary & Director of KASC delivering the Presidential Address in the International Workshop held at the College Premises.*

✍ The Covai Mail

Kongunadu Arts and Science College organized a two-day Indo-UK international workshop on the 'Socio-Economic Analysis of Textile Effluent Pollution Impacts in The Noyyal River and The Exploration of Radiation through Algae and Graphene Membrane' from 13th to 14th December 2023.

The event began with an invocation by Manimegalai, Assistant Professor-Tamil, and the lighting of the traditional lamp by Muthukumar, Assistant Professor and Principal Investigator of SPARC Project P2569. C.A. Vasuki, Secretary, and Director of KASC delivered a Presidential address, emphasizing the institution's commitment to impactful research.

During her speech, she highlighted the societal initiatives introduced by KASC and showcased the project as a significant example for the community. She also discussed the book "Noyyal Indru" and delved into the rich history of the Noyyal River. She expressed gratitude to the participants, including NGOs, scientists, researchers, social activists, and scholars from various institutions, wishing for the project's success.

The keynote address by Prof. Senthil Arasu Sundaram from Teesside University UK provided insights into the history of the Noyyal River and the severity of its pollution. Prof. David Ian Benson from the University of Exeter, UK, emphasized the workshop's importance in addressing ecological crises and environmental threats, outlining potential solutions using advanced technologies.

Paulsamy, Dean R&D at KASC, highlighted India's historical water management skills and showcased the ancient Meenatchi Amman Temple's water management system. He expressed optimism about the workshop's resourcefulness to society. The event continued with various sessions chaired by resource persons from different universities, fostering collaboration and knowledge exchange.

# ISUZU I-Care Winter Service Camp 2023 Begins

✍ The Covai Mail

Isuzu Motors India announced the launch of its annual ISUZU I-Care Winter Service Camp, running from December 18th to 23rd, 2023. The camp, an initiative of 'ISUZU Care,' spans across authorized dealer service outlets in various cities. Demonstrating a commitment to customer delight, the camp offers attractive benefits and preventive maintenance checks for ISUZU D-MAX pick-ups and SUVs.

Customers visiting will enjoy a Free 37-Point Comprehensive Check-up, Free Top Wash, and discounts, including 10% on labor, 5% on parts, and 5% on lubes & fluids.

This winter initiative, embodying the motto 'Caring Never Stops,' reinforces ISUZU's dedication to providing proactive service and a superior ownership experience.

Cities covered include Ahmedabad, Bengaluru, Delhi, Hyderabad, Mumbai, and many more.

# Tata Technologies Innovation Center in Coimbatore

✍ The Covai Mail

Tata Technologies opened its first innovation center in Coimbatore, aiming to develop software solutions for global automotive companies. The center will offer opportunities for local talent to work on global projects, enhance skills in vehicle software, and contribute to innovations in the automotive value chain. Warren Harris, CEO of Tata Technologies, expressed excitement about establishing a presence in Coimbatore, highlighting the region's thriving engineering landscape. He also added, "This strategic initiative will ensure a continuous exchange of talent, ideas, and solutions, propelling the industry forward into a future defined by innovation and efficiency."

The center will focus on various vehicle software projects, including embedded software, ADAS, connected vehicles, functional safety, cybersecurity, and AUTOSAR, with plans to employ 100 local professionals initially.

# Amway Launches Glister Action Toothpaste

✍ The Covai Mail

Amway India unveiled the Glister Multi-Action toothpaste, recognizing the link between oral and overall health. Backed by a five-decade legacy, it addresses prevalent dental issues in India.

CMO Ajay Khanna highlights the WHO's alarming stats on tooth decay, emphasizing Glister's role in holistic wellness. The new toothpaste boasts a 42% enamel whitening boost, 12-hour fresh breath, and plaque reduction.

It's enriched with plant-based goodness, devoid of animal-derived ingredients, sugar, alcohol, peroxides, or parabens.

The herbal variant includes 11 natural ingredients and both are IDA-certified. Priced at Rs.322 and Rs.333 for 200g packs, they offer a 50g option for flexibility. Glister aims to fortify the oral care microbiome, recognizing its vital role in overall well-being.

To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

# There is a Steady Rise in Women Entrepreneurship

*- **Brindha,** Principal - PSG CAS*

✍ The Covai Mail

FICCI Ladies Organization (FLO) organized 'The SHERISES Start-up Conclave' at PSG College of Arts & Science (PSG CAS), Coimbatore, a national initiative sparking enthusiasm across 16 chapters.

The event held on 12th December, 2023 was led by FICCI FLO & STEP, commenced with a motivational analogy - entrepreneurship akin to waves meeting rocks, requiring seizing opportunities amidst challenges.

Event Moderator Sowmya Keshava, Founder & CEO- Nilah Advisors, set the tone in the event. Rama Rajasekaran, Chairperson-FLO Coimbatore, in his welcome address emphasized the panel's prowess. Poonam Bafna shed light on the transformative SHERISES Program, a series of empowering boot camps that identified 25 promising talents from Coimbatore.

Rama Rajasekaran's address underscored the conclave's significance, quoting Zappos CEO Tony Hsieh and expressing FLO's commitment to supporting aspiring entrepreneurs. Poonam Bafna detailed the impactful SHERISES Program, fostering a community of over 100 individuals.

In her speech, Sowmya celebrated the shift from job seekers to providers in the last decade, acknowledging the conclave's potential to drive attendees toward entrepreneurship. Brindha, PSG CAS Principal, delivered a presidential address, measuring societal progress through women's achievements and highlighting the rise of women-owned businesses. She also added, "With 15 million women-owned businesses in the country employing 22-27 million people, there is a steady rise in women entrepreneurship that gives us confidence. India will become a hub of women entrepreneurs within the next five years."

Swathy Rohit, Co Founder & CEO, Health Basix, shared her pandemic-driven journey, emphasizing purpose over profit. Ravi Kallayil, Co Founder & CEO, Plaeto Footwear recounted his Footwear venture, born from a desire for affordable quality shoes. Yamuna Sastry, Co Founder, Cabdost & CIO – FLIP, a first-generation entrepreneur, emphasized the power of students' willingness to learn.

Other panelists including Aarti Gupta, CEO- DBR Ventures, brought diverse perspectives to the session. The session was a platform for knowledge-sharing, fostering the growth of women entrepreneurs in India.

*FICCI FLO organizes Start-up Conclave at PSG College of Arts & Science*

# NIS Correspondent Honored at Kasturi College's Graduation

*Chaitanya Krishnakumar, the Correspondent of Nehru International School receives the B.Ed Degree in Computer Science Certificate during the 8th Graduation Ceremony of Kasturi College of Education*

✍ The Covai Mail

Chaitanya Krishnakumar, the Correspondent of Nehru International School, added another feather to her cap by securing a B.Ed in Computer Science during the 8th Graduation Ceremony of Kasturi College of Education and Kasturi Institute of Management. This notable achievement follows her previous success in obtaining a Ph.D. in Computer Science.

The ceremony, held on December 9, 2023, featured Nikita V Shaw, Managing Trustee, inaugurating the event. Kasthuri, Principal i/c of Kasturi College of Education, and Selvaraj, Principal of Kasturi Institute of Management, delivered the Welcome address and Academic report.

Vijayakumar A Shaw, Correspondent of Kasturi Group of Educational Institutions, delivered a presidential address, emphasizing the significance of continuous learning and applying knowledge for societal upliftment. Shaw shared nine life lessons, urging graduates to be micro-ambitious, exercise understanding, and contribute to society.

Prof. Ravi, Vice-Chancellor of Alagappa University, Karaikudi, addressed the graduates, highlighting the urgent need for moral education in India. Prof. Ravi stressed the role of teachers as agents of social change and emphasized the crucial components of teacher training.

The ceremony celebrated the graduation of 313 students in various disciplines, including 281 B.Ed. students and 32 Management students. Prof. Ravi presented degree certificates and delivered a special address. Outstanding achievers from academic years 2018-2019, 2019-2020, and 2020-2021 received medals and certificates, and subject-wise toppers were recognized.

Post-graduation, an Alumni meeting was organized by Umarani, Assistant Professor at Kasturi College of Education, to showcase academic activities to alumni members and gather feedback for continuous improvement.

The event concluded with students receiving their certificates after taking a pledge in front of the Principal. Krishna Kumar, CEO and Secretary of Nehru Group of Institutions, also participated in the ceremony.

# Quantum ML in Health Care at NGP iTECH

✍ The Covai Mail

Dr. N.G.P Institute of Technology organized a week-long AICTE Training and Learning (ATAL) sponsored Faculty Development Programme (FDP) on "Quantum Machine Learning in Health Care" from December 4th to 9th, 2023. The event, financially supported by ATAL Academy, saw active participation from 50 faculty members and PhD scholars in the Computer Science cluster from various parts of India.

The Inaugural function was graced by the Chief Guest Venkateshwaran, Director, Product Led Growth Conversigh, included key figures like S. U. Prabha, the Principal, Krishnamoorthi, Head of Information Technology, and Convenor of the FDP Programme and Pavithra, the FDP Coordinator. The event provided a platform for knowledge enhancement, featuring 10 technical sessions conducted by experts from prestigious institutions like IITs, NITs, and renowned universities.

With a focus on Quantum Machine Learning in the Health Care sector, the FDP facilitated valuable insights from industry experts and scholars, fostering collaboration among participants from diverse institutions across the country.

# Axis MF Launches US Treasury Bond ETF

✍ The Covai Mail

Axis Mutual Fund has introduced the 'Axis US Treasury Dynamic Bond ETF Fund of Fund,' aiming to provide regular income by investing in overseas ETFs focused on US treasury securities.

Managed by Vinayak Jayanath, the fund allocates 95-100% to overseas ETFs and 0-5% to debt instruments. Key ETFs in consideration include iShares Short Treasury Bond ETF and SPDR Bloomberg 1-10 TIPS ETF.

The fund employs an active strategy to adapt to market fluctuations, offering a dynamic approach to capitalize on yields and manage risks. Open for subscription from December 12 to December 19, 2023, the fund aims to be a strategic addition for diversification in global markets.

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan

Ananya's

# Hearty wishes

For

10th ANNIVERSARY

THE COVAI MAIL

TAMIL & ENGLISH WEEKLY NEWSPAPER

Ananya's Nana Nani Homes
A Paradise For Senior Citizens

Ananya's Garden
Luxury Villa Plots

Ananya's NEST
Business Class Residence

Ananya's ABW FLY ASH BRICKS
Fly Ash Bricks